முருகப்பெருமான் துணை

**மகான் அங்காரக பகவான் (செவ்வாய்) அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

23.06.2021, புதன்கிழமை

1. கலியுகத்தின் வரமே அரங்கா
கந்த வேலன் சூட்சும பலமாக
அழியாமை பெற்றுவந்த தேசிகா
அகிலமதில் உன்பெருமை கூறி
2. கூறியே யோகபிரசன்ன ஆசி
குறையிலா பிலவ மிதுன திங்கள்
இருநான்கோர் திகதி கணக்கன்வாரம்
(பிலவ வருடம் ஆனி மாதம் 9ம் நாள், 23.06.2021 புதன்கிழமை)
இயம்பிடுவேன் அங்காரக பகவான் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உண்மை பலம் தரும் அரங்கன்
ஞானவழிகளை உலகமே ஏற்று
ஞானிகளை வணங்கி வருக மாற்றம்
4. மாற்றம் பாதுகாப்பு மிக்கதாக
மக்களை காக்கும் வண்ணமாக
ஆற்றல்பட குருவருள் துணைவரும்
அனுதினம் ஞானிகள் நாமசெபம்
5. செபம் போற்ற நல்ல சக்தியும்
சிந்தை தெளிவும் பேராற்றலும்
அபயமென மக்களை அனுகியே
ஆறுமுகனார் அருளும் தயவுமாக
6. ஆகவே எங்கும் பரவியே
அகிலம் ஞானபலம் அடையும்
யுகம் மாற்றும் உயர் சேவையை
உலகமெங்கும் தொண்டர்படை கொண்டு
7. கொண்டுமே சிறப்பாய் சேவை
குருமார்க்கமாக இயக்கி வர
தொண்டுவழி உலகமே தேறும்
தேசிகன் சீடர்களாகி வரம் பெற்ற
8. வரம்பெற்ற மக்கள் வழியில்
வையகம் வளர்ச்சி பெறும்
திறம்மிக்க ஆளுமை கூடி
தேசமே ஞான ஆட்சி பெறும்
9. பெருமைமிக்க சேவை மாந்தர்கள்
பெரும் பதவிகளினில் இணைந்து
வறுமை போக்கும் செயல்பாடும்
வளர்ச்சிக்கான திட்டங்களும் உருவாகி

10. உருவாகி உலகம் அமைதிபெறும்
உண்மையான சமூகச் சூழல் பெருகி
தருமமும் தயவும் மிக்கபடியே
தலைமைகள் அமைந்து சிறப்பு காண்கும்

11. காண்கவே காலம் கடத்தா
கட்டளையாக உலக மக்கள்
ஆன்மீக ஞானவழிக்கு வர
அகிலம் சடுதி மாற்றம் பெறும்
யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–